Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 284/2025** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **ஜெயபால்** |
| Father's Name | :: | **தர்மராஜ்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**08.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை தாலுகா சவ்வாஸ்புரத்தில் குடியிருந்து லாரி ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ராமலிங்கா மில் அருகே உள்ள பெட்ரோல் பல்க்கில் பெட்ரோல் போடுவதற்காக நான் சென்றபோது அருகில் எனது ஊர்க்காரான சரவணன் வந்த இருசக்கர வாகனமானது விபத்திற்குள்ளான விவரம் எனக்கு தெரிய வந்தது. விபத்து நடந்த போது நான் நேரடியாக பார்க்கவில்லை. அதனால் எவ்வாறு விபத்து நடந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது. நான் அருகே சென்று பார்த்தபோது சரவணனுக்கு முகத்தில் பலத்த காயம் இருந்தது. உடனே ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்து அவரை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி சரவணனின் மகனான சுபாஷ்க்கு நான் தான் விபத்து சம்மந்தமான தகவலை தெரிவித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள், அவர்களிடமும் நான் மேற்படி விவரத்தை தான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை**

**செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 14.04.2025ம் தேதி இரவு 09.40 மணியளவில் நான் அருப்புக்கோடடை ஆலிவ் பெட்ரோல் பல்க் அருகே வரும்போது மேற்படி இடத்தில் எனக்கு முன்னால் ஆஜர் எதிரி TN 67 AA 7312 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று சரவணன் என்பவரது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்திய சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், அதன்பிறகு நான் காயம்பட்ட நபரின் மகனான அசா.1 க்கு போன்மூலம் தகவல் சொல்லிவிட்டு , 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட நபர் மற்றும் எதிரியை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அதன்பின்பு 15.04.2025ம் தேதி மேற்படி சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையம் சென்று சுபாஸ்சந்திரபோஸ் புகார் மனு கொடுத்ததாகவும் போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**